பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 14 செவ்வாய்க்கிழமை 01.11.2022 கதிர் 248

## மண்மேடு சரிந்து விழுந்து வயோதிபர் பரிதாபப் பலி!

### பண்டாரவளையில் சோகம்

வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டாரவளை – ஹம்பராவ பகுதியில் வீடொன்றின் மீது நேற்றிரவு இவ்வாறு மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளது 8

# கெப்பித்திக்கொல்லாவவில் மக்களின் தாக்குதலில் பொலிஸ் சார்ஜன்ட் சாவு!



### பௌத்த பிக்கு உட்பட 14 பேர் கைது

அனுராதபுரம் – கெப்பித்திக் கொல்லாவ, ரம்பகெப்புவெவ பகுதியில் ஏற்பட்ட அமைதியின் மையின்போது தாக்குதலுக்குள்ளான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாரியபொல பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட்டே உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் மதவாச்சி வைத்தியசாலையில் வைக் கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 29 வயதான பௌத்த பிக்கு ஒருவர் உட்பட 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு 2

## ஆப்கானிஸ்தானை வென்றது இலங்கை




'ரி – 20' உலகக்கிண்ணத் தொடரின், 'சுப்பர் 12' சுற்றில் குழு 1 இற்கான இன்றைய போட்டியில், ஆப்கானிஸ்தான் அணியை எதிர்த்தாடிய இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது. 8

# அதிகாரப் பகிர்வுடன் தீர்வு வழங்கி நாட்டைக் கட்டியெழுப்பச் சந்தர்ப்பம்

### நழுவ விடாதீர்கள் என்று அரசிடம் சுரேஷ் வலியுறுத்து

**நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நல்லதோர் சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது. எனவே, தோல்வியுற்ற இனவாத சிந்தனைக்குள் தொடர்ந்தும் மூழ்கியிருக்காமல், தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதனூடாகவும்,** 8



## சாணக்கியனை கிண்டலடித்த வியாழேந்திரன்



2009ஆம் ஆண்டு மே மாதம் இந்நாட்டில் யுத்தம் முடிவடையாவிட்டால் சாணக் கியன் உள்ளிட்ட பலர் இலங் கைக்கு வந்திருக்கமாட்டார்கள். 8

### இராஜாங்க அமைச்சரின்

## வாகனம் மோதி ஒருவர் மரணம்

இராஜாங்க அமைச்சர் சனத் நிரந்தவின் வாகனம் மோதியதில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டிருந்த குடும்பஸ்தர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 8

## குழப்பத்தில் ராதா எம்.பி.



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழாவில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் பங்கேற்றதைப் பலரும் வரவேற்று, மலையக அரசியலில் இது புதிய திருப்பம் என்று பாராட்டி வரும் நிலையில், முற்போக்குக் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. 2

## ஆலயத்தில் சறுக்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

ஆலய வழிபாட்டுக்குச் சென்றவர், கால் கழுவும் தண்ணீர்க் குழாயின் அருகில் சறுக்கி வீழ்ந்து காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

யாழ். தென்மராட்சி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சண்முகலிங்கம் கேசவநாதன் (வயது – 52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 8

## சிதறு தேங்காய் போல் சிதறிய மொட்டுக் கட்சி

### அம்பலப்படுத்திய கம்மன்பில



அரசியல்செய்ய முடியாத தால் பஸில் ராஜபக்ஷ தனது தாய்நாடு நோக்கிப் பறந்து விட்டார். இதனால் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சி, சிதறு தேங்காய் உடைப்பது போல சிதறியுள்ளது.

–இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில 2

## ராஜபக்ஷக்களுடன் கூட்டுச் சேர சு.க. இனிமேல் தயார் இல்லை

### ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறுவோம் என மைத்திரி நம்பிக்கை



நாட்டை அழித்த ராஜபக்ஷக்கள் வீற்றிருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனிமேல் கூட்டணி அமைக்கத் தயாரில்லை. நாட்டின் ஆட்சியைத் 2

### யாழில் போதைப் பாவனை:

## இரு மாதங்களில் 508 பேர் சிக்கினர்



உயிர்கொல்லி போதைப் பொருள் பாவனையுடன் தொடர் புடைய 508 பேர் கடந்த இரண்டுமாதங்களில்யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நீதி மைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2

### முப்படைகளின் கண்காணிப்பையும் மீறி

## வடக்குக்கு மாகாணத்துக்கு எவ்வாறு போதைப்பொருள்?

### கேள்வி எழுப்புகின்றார் மைத்திரி

முப்படையினரினதும் பொலிஸாரினதும் 24 மணிநேர முழுநேரக் கண்காணிப்புக்குள் இருக்கும் வடக்கு மாகாணத்துக்குள் போதைப்பொருள் கள்ளந்தவழியால்வருகின்றன?

–இவ்வாறு கேள்வி எழுப்பினார் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன.

போரால் பெரிதும் 2

## வடக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணம் கல்வியில் மட்டும் இன்னமும் வீழ்ச்சியடையாமல் வீறுகொண்டு பயணிக்கின்றது. இந்தநிலையில், வடக்கில் பாடசாலை மாணவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் கூட தற்போது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றார்கள் என்ற செய்தி மிகவும் மனவருத்தத்தைத் தருகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கில் இளையோர் சமூகத்தைக் குறிவைத்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் பெரும் புள்ளிகளைக் கண்டுபிடிக்க அனைத்து மட்டங்களிலும் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வடக்கிலுள்ள இளையோர் சமுதாயத்தைப் போதைப்பொருள் பாவனையில் இருந்து மீட்டெடுக்க பெற்றோர்கள் மற்றும் கல்வியலாளர்கள் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## கெப்பித்திக்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிவித்துள்ளது. கெப்பித்திக்கொல்லாவ பிரதேசத்தில் நேற்று மாலை காட்டு யானை தாக்கிப் பெண் ஒருவர் உயிரி ழந்தார்.

இதையடுத்து பிரதேச மக்கள் வீதியை மறித்து டயர்களை எரித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தமது கடமைகளை சரியாகச் செய்வதில்லை எனக் குற்றஞ் சாட்டி அவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைக் கட்டுப்படுத்த கெப்பித்திக்கொல்லாவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் நேற்றிரவு அங்கு சென்றனர்.

இதன்போது ஒன்றுதிரண்ட மக்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிர யோகம் நடத்தினர். நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும், தாக்குத லுக்கு இலக்காகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை மீட்பதற்காகவுமே வானத்தை நோக்கிப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்தூவ தெரிவித்தார்.

தாக்குதலில் படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜன்ட் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்

## ராஜபக்ஷக்க......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்மானிக்கும் சக்தியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் உருவெடுக்கும். 'மொட்டு'க் கட்சி போல் எமது கட்சியும் துண்டுதுண்டாகச் சிதறுண்டு போகாது.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு கட்சிக்குள்ளும் எதிரிகளும், துரோகிகளும் இருப்பார்கள். அவர்களை அடையாளம் கண்டு களையெடுப்பது கட்சியின் தலைமையின் பொறுப்பு. அந்தப் பணியை மொட்டுக் கட்சியின் தலைமை செய்யத் தவறிவிட்டது. அதனால்தான் அந்தக் கட்சி இப்போது துண்டுதுண்டாகச் சிதறுண்டு போயுள்ளது. அந்தக் கட்சியால் இனிமேல் மீண்டெழவே முடியாது.

மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவா? பஸில் ராஜபக்சவா? அல்லது ஜி.எல்.பீரிஸா என்ற சந்தேகம் பலருக்கும் உண்டு.

மொட்டுக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இனிமேல் கூட்டணி அமைக்கத் தயாரில்லை. நாட்டின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் உருவெடுக்கும். மக்கள் நல்லாட்சியையே விரும்புகின்றார்கள் – என்றார்.

## சிதறு தேங்காய்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சிதறியுள்ளதால், அதிருப்தி நிலையில் உள்ளவர்கள் எம்முடன் இணைவார்கள். ஏனெனில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக் காக்க நாம் எதையும் செய்வோம் என்பது அவர்களுக்குத் தெரியும். மக்கள் ஆணையைக் காக்கவே நாம் அமைச்சுப் பதவிகளை இழந்தோம். மாறாக சலுகைகளுக்காக அரசியல் நடத்துவது கிடையாது – என்றார்.

## குழப்பத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரசியல் பீடத்துக்கு அறிவிக்காமல் – அனுமதி பெறாமல், இ.தொ.காவினருக்கு அழைப்பு விடுத்த தொழிலாளர் தேசிய சங்கத்தின் தன்னிச்சையான முடிவு, 'கூட்டணி ஒற்றுமை'க்கு ஆரோக்கியமானதல்ல என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தலைமையகத் திறப்பு விழா ஏற்பாடுகள் குறித்து கூட்டணிக்குள் முன்கூட்டியே கலந்துரையாடப்பட்ட நிலையில், இ.தொ.காவினரை அழைப்பது குறித்து ஏன் அறிவிக்கப்படவில்லை என்றும் இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

திறப்பு விழாவுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அழைப்பது பிரச்சினை இல்லை. ஆனால் பொது விடயங்களின் போது கூட்டணிக்குள் தன்னிச்சையான முடிவு ஏற்புடையது அல்ல. இது தொடர்பில் உரிய தரப்புகளிடம் விளக்கம் கோரப்படும் என்று இராதாகிருஷ்ணன் தனக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையகத் திறப்பு விழா ஹட்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே ஆகியோர் நிகழ்வில் பிரதம, சிறப்பு அதிதிகளாகப் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், உப தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்டோரும் திறப்பு விழாவில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், திறப்பு விழா முடியும் வரை இராதாகிருஷ்ணன் மேடையில் இருக்கவில்லை. ஆலய நிகழ்வு எனக் கூறி இடையில் அங்கிருந்து வெளியேறியிருந்தார்.

## இரு மாதங்களில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை முழுவதும் உயிர்கொல்லி போதைப்பொருள் மிகப் பெரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. ஆனால் வடபகுதியில் அது மிகவும் அதிகளவில் காணப்படுகின்றது.
எதிர்கால சமூகத்தைப் பாதிக்கும் இந்த விடயம் தொடர்பில் அனைவரும் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை மிக அதிக அளவில் காணப்படுகின்றது. கடந்த ஒரு சில மாதங்களாக இது அதிகரித்துள்ளது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் உயிர்கொல்லி போதைப்பொருள்களுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

ஏனைய இடங்களோடு ஒப்பிடும்போது அதிகளவாக காணப்படுகின்றது.

குறிப்பாக யாழ். மாவட்டம் மிகவும் ஒரு பாதிப்பான நிலையில் காணப்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டும் – என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## தெற்கு எதுவரை தயார்?

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தொடர்பில் தென்னிலங்கை சிங்களப் பேரினவாத அரசுகளின் போக்கு சம்பந்தமாக, அவற்றின் முகத்திரையைக் கிழித்து, சில விடயங்களைப் பகிரங்கமாகவும் வெளிப்படையாகவும் கூறியிருக்கின்றார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

'பேச்சுவார்த்தைகளுக்கு தயார்; சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!' – என்று ஜனாதிபதியும் பிரதமரும் வெறும் வெற்று முழக்கங்கள் செய்வதில் அர்த்தமில்லை. ஆகிற காரியத்தை பாருங்கள் – என்ற சாரப்பட சுரேஷ் பிறேமச்சந்திரன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் தமிழர்கள் முழு அளவில் கீழ் இறங்கி வந்து, இயன்றளவு ஒத்துழைப்பு தந்தார்கள். நடந்தது என்ன? வருடங்கள் இழுத்தடிக்கப்பட்டன. வழிகாட்டல் குழு 84 தடவைகள் கூடியது. ஒவ்வொன்றுக்கும் தமிழர் பிரதிநிதிகள் தவறாது சமுகம் தந்தனர். முழு ஒத்துழைப்புக் கொடுத்தனர். முழு நாடாளுமன்றத்தையுமே அரசமைப்பு உருவாக்கப் பேரவையாக மாற்றும் நாடகம் கூட நடந்தது. நாடாளுமன்றத்தில் வாரக்கணக்கில் பேசினார்கள். கடைசியில் விடயம் என்னவாயிற்று?

மலையைக் கெல்லி எலியைக் கூடப் பிடிக்க முடியாமல் போனதுதான் மிச்சம்.

மீண்டும் தமிழினத்திற்கு ஏமாற்று நாடகமே அரங்கேறியது. சுமார் ஐந்து ஆண்டு கால ஏமாற்று நாடகம்.

இப்போதும் திரும்பவும் 'பேச்சுக்குத் தயார்; சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள்!' என்று அடுத்த ஏமாற்று நாடகத்துக்கு முன்னுரை எழுதத் தொடங்கி விட்டார்கள்.

இதை ஒட்டித்தான் முக்கியமான கருத்துப் பகிர்வு ஒன்றை சுரேஷ் பிறேமச்சந்திரன் முன் வைத்திருக்கின்றார்.

தமிழர் தரப்பு ஐக்கியப்பட்டுத் தனது நிலைப்பாட்டை தெளிவாகவும், உருப்படியாகவும், திட்டவட்டமாகவும், சாத்தியமான முறையிலும் வெளிப்படுத்தி நிற்கின்றது. தமிழ் தலைமைகள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு, சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு கோரி நிற்கின்றனர். தமிழர்கள் தங்கள் எதிர்பார்ப்பு யாது என்பதைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தி விட்டனர்.

இது தொடர்பில் அரசு தரப்பில், தென்னிலங்கை சிங்களத்தின் நிலைப்பாடு யாது என்பதை வெளிப்படுத்தி, அதிலிருந்துதான் பேச்சுத் தொடங்க – தொடர – வேண்டும். இதுதான் முறை.

அதை விடுத்து, 'அரிய சந்தர்ப்பம்; பேச வாருங்கள்!' என்று ஒவ்வொரு முறையும் கூப்பிட்டு கூப்பிட்டு பேச்சு நடத்திய ஏமாற்ற வரலாறை மீண்டும் தொடராமல் இருப்பதே நல்லது.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்குத் தமிழரைப் பேச அழைக்கும் முன்னர், அது தொடர்பில் தென்னிலங்கை சிங்களத்தின் நிலைப்பாடு என்னவென்பதை வெளிப்படுத்துவதுதான் இப்போதைய தேவைப்பாடாகும்.

மீண்டும், மீண்டும் பேச்சுக்கு அழைப்பு என்ற நாடகத்தை விட்டு, தீர்வுக்கு தன்னுடைய இயலுமையைக் கோடி காட்டுவதுதான் தென்னிலங்கை அரசின் இப்போதைய பொறுப்பாகும்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டும் இவ்விடயம் முற்றிலும் சரியானதே.



## போதைப்பொருளுக்கு எதிராக மகாஜனாவில் விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பியந்த வீரசூரிய தலைமையில் நேற்று (திங்கட்கிழமை) காலை கல்லூரி பிரதான மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அதன்போது, போதைப்பொருளால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாகவும், போதைப்பொருள் பாவனையில் இருந்து எவ்வாறு மீள்வது என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், போதைப்பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் , பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் , பெரும்பாலான குற்றங்கள் போதைப்பொருள் பாவனையால் செய்யப்படுகின்றன எனவும், அதனால் போதைப்பொருளுக்கு எதிராக மாணவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

இந்நிகழ்வில், மத குருமார்கள், யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் விஜித குணரட்ன , பாடசாலை அதிபர் , ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

## 'ஓ.எம்.பி.அலுவலகமே வெளியேறு' மன்னாரிலும் உறவுகள் போராட்டம்!




மன்னாரில் உள்ள காணாமல்போனோர் அலுவலகத்திற்கு முன்பாகவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ், மன்னார் பொது அமைப்பு ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் என பலர் கலந்து கொண்டனர். நீதி இல்லாத நாட்டில் காணாமல்போன ஆள்கள் பற்றிய அலுவலகம் எதற்கு?, ஓ.எம்.பி.அலுவலகமே மன்னாரை விட்டு வெளியேறு என்ற கோஷங்களை எழுப்பியிருந் தனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு 2 லட்சம் ரூபா பணத்தை வழங்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு அவர்கள் கண்டனம் வெளியிட்டனர்.

## சர்வதேச பாரிசவாத தினத்தை ஒட்டி கல்முனையில் விழிப்புணர்வுப் பவனி





(காரைதீவு நிருபர் சகா)


உலக பாரிசவாத தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் கல்முனை ஆதார வைத்தியசாலை ஏற்பாட்டில் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் விழிப்புணர்வு நடைபவனி நேற்றுத் திங்கட்கிழமை இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து வைத்தியசாலையில் பாரிச வாதம் தொடர்பான விழிப்புணர்வு கூட்டமும் இடம்பெற்றது.

வைத்திய நிபுணர்கள் இதில் கலந்து கொண்டு விளக்கமளித்தார்கள்.

# அமெரிக்கப் பேய்த் திருவிழாவில் துப்பாக்கிச் சூடு; இருவர் மரணம்!





லொஸ்ஏஞ்சல்ஸ், நவ.01

அமெரிக்காவிகன் முக்கிய மாகாணம் ஒன்றில் இடம்பெற்ற ஹாலோவீன் நிகழ்வில் கலந்து கொண்ட ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கிறிஸ்தவ புனிதர்களை நினைவுகூரும் ஹாலோவீன் கொண்டாட்டம் நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டு கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்த போது, கூட்டத்தில் இருந்த நபர் ஒருவர் திடீரென துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டார்.

இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன், கூட்டத்தினர் அனைவரும் அலறியடித்தபடி நாலாபுறமும் சிதறி ஓடினர். இந்தச் துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். அத்துடன், மேலும் 2 பேர் படுகாயம் அடைந்தனர்.,

துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்ட மர்ம நபர் பொலிஸார் வருவதற்குள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளமையால் அவரைப் பொலிஸார் வலை வீசித் தேடி வருகின்றனர். அண்மையில் தென்கொரியாவில் இவ்வாறானதொரு பேய்த் திருவிழாவில் இடம்பெற்ற சனநெரிசலில் சிக்கி நூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாரால் மேலும் ஒருவர் கொலை ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம் உக்கிரம்!





ஈரானில் நடைபெற்று வரும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் மேலும் ஓர் இளைஞர் பொலிஸாரின் காவலில் உள்ள போது உயிரிழந்த சம்பவத்தினால் அங்கு மேலும் பதற்ற நிலை உருவாகியுள்ளது. ஈரான் நாட்டில் இஸ்லாமிய மத சட்டங்களின்படி ஹிஜாப் அணிவது கட்டாயம் என்றாக்கப்பட்டு உள்ள நிலையில், தெஹ்ரான் நகரில் ஹிஜாப் சரியாக அணியவில்லை என கூறி பொலிஸார் நடத்திய தாக்குதலில் கோமா நிலைக்கு சென்ற 22 வயதான மாா அமினி என்ற இளம்பெண் கடந்த மாதம் 17 ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனை கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக ஹிஜாப்பை கழற்றி வீசியும், ஹிஜாப்பை தீ வைத்து எரித்தும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், இதுவரை 29 குழந்தைகள் உட்பட குறைந்தது 234 எதிர்ப்பாளர்கள் அடக்குமுறைகளில் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து, பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவிகளும் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக களமிறங்கி உள்ளனர்


இந்த நிலையில் 19 வயது சமூக வலைதள பிரபலம், மெஹா்ாத் ாஹிதி, கடந்த 26 ஆம் திகதி பொலிஸ் காவலில் உயிரிழந் துள்ளார். அவர், ஐ.ஆ.ர்.ஜி.சி. புலனாய்வுத் தடுப்பு மையத்தில் அடித்துக் கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது. 'ஈரானின் ஜேமி ஒலிவர்' என்றும் அழைக்கப்படும் பிரபல சமையல்காரரான இவர், இன்ஸ்டாகிராமில் 25,000 பின்தொடர்பவர்களைக் கொண்டிருந்தவர். தனது 20 வது பிறந்தநாளுக்கு ஒரு நாள் முன்பு இறந்துவிட்டார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. இதனால் மீண்டும் ஆங்காங்கே போராட்டங்கள் வெடித்துள்ளன.

இதற்கிடையில், காவலில் இருந்த சமையல்காரரைக் கொன்றனர் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஈரானிய அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். அவரது மரணத்திற்கான காரணம் பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறியுள்ளனர். '

ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மத்தியில் பிரபல செஃவ் 'ஈரானின் ஜேமி ஒலிவர்' அடித்துக் கொல்லப்பட்டமையால்,மேலும் பல இடங்களில் புதிய போராட்டங்கள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொங்கோ இசை நிகழ்ச்சியில் சனநெரிசல் பதினொருவர் பலி!








கின்ஷாசா, நவ.01


அண்மையில் தென்கொரியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஏற்பட்ட சன நெரிசலால் நூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ள நிலையில், மத்திய ஆப்பிரிக்க நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இம்பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொங்கோ தலைநகர் கின்ாசாவில் உள்ள தியாகிகள் அரங்கத்தில் கொங்கோ பாடகர் பாலி இபுபாவின் இசை நிகழ்ச்சிக்காக 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வருகை தந்திருந்தனர். ரசிகர்கள் பலர் வி.ஐ.பி. இருக்கைகள் மற்றும் முன் ணபதிவு செய்யப்பட்ட இருக்கைகளில் அமர்வதற்க்காக முண்டியடித்துக் கொண்டு சென்றனர். அத்தோடு 80 ஆயிரம் பேர் அமரும் அரங்கில் அதை விட அதிகமானோர் குவிந்தமையால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

அரங்கத்திற்கு வெளியேயும் நீண்ட வரிசையில் பலர் காத்திருந்தனர்.

அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டது. அரங்கத்திற்கு வெளியே இருந்த கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கலைக்கப் பொலி ஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். அந்தக் களேபரத்தில் 2 பொலிஸார் உள்பட 11 பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயங் களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 'தியான்ஹே' விண்வெளி நிலையத்துக்குரிய ஆய்வுகூடத்தை விண்ணுக்கு ஏவியது சீனா!



பீஜிங், நவ.1

'தியான்ஹே' என பெயரிடப்பட்டுள்ள புதிய விண்வெளி நிலையத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் பயன்பாட்டுக்கு கொண்டுவரும் நோக்கில் சீனா விரைந்து செயற்பட்டு வருகிறது.

விண்வெளியில் தனெக்கென புதிதாக விண்வெளி நிலையம் ஒன்றை அது அமைத்து வருகிறது. இதற்காக சீன விண்வெளி வீரர்கள் சுழற்சி முறையில் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு விண்வெளி நிலையம் அமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்த விண்வெளி நிலையத்தில் ஆய்வு பணிகளை மேற்கொள்வதற்காக சீனா ஏற்கனவே 'வெண்டியன்' என்கிற ஆய்வுகூட அமைப்பை அனுப்பியுள்ளதுடன் அந்த ஆய்வுகூட அமைப்பு 'தியான்ஹே' விண்வெளி நிலையத்துடன் வெற்றிகரமாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மெங்டியன் என்கிற 2 ஆவது ஆய்வுகூட அமைப்பை சீனா நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது. சீனாவின் தெற்கு தீவு மாகாணமான ஹைனான் கடற்கரையில் உள்ள வென்சாங் ஏவுதளத்தில் இருந்து 'லாங் மார்ச் 5பி வை4' ராக்கெட் மூலம் மெங்டியன் ஆய்வுகூட அமைப்பு விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த ஆய்வுகூட அமைப்பு நுண் புவியீர்ப்பு விசையைப் படிக்கவும், திரவ இயற்பியல், பொருள் அறிவியல், அடிப்படை இயற்பியல் ஆகியவற்றில் சோதனைகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியத் தொழிலதிபர் ஒருவர் உகண்டாவில் சுட்டுக் கொலை




உகாண்டாவில் பொலிஸார் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இந்தியாவைச் சேர்ந்த இளந் தொழிலதிபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

ஆபிரிக்க நாடான உகாண்டாவின் மேற்கு பிராந்தியத்தில் உள்ள கிரோரோ நகரில் வசித்து வந்த 24 வயதுடைய இந்தியரான குந்தாஜ் படேல் என்பவர் அதே நகரில் இரும்பு பொருள்கள் விற்பனை செய்யும் கடையை நடத்தி வந்துள்ளார். கடந்த 27ஆம் திகதி அவர் வழக்கம் போல் கடையை திறந்து வியாபாரம்செய்துகொண்டிருந்தார்.

அதன்போது, பொலிஸ்காரர் ஒருவர் குந்தாஜ் படேலின் கடைக்குள் வேகமாக நுழைந்து தனது துப்பாக்கியை எடுத்து அவரைச் சர மாரியாக சுட்டார். இதில் அவரது மார்பில் துப்பாக்கி குண்டுகள் துளைத்து, ரத்த வெள்ளத்தில் அவர் சரிந்தார். இதையடுத்து அந்தப் பொலிஸ்காரர் அங்கிருந்து தப்பி ஓடினார். எனினும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அவரை விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்தது, பொலிஸில் ஒப்படைத்தனர். இதனிடையே துப்பாக்கிச்சூட்டில் படுகாயம் அடைந்த குந்தாஜ் படேலை கடையின் ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர் மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த கொலைக்கான பின்னணி என்பது தெரியாத நிலையில், கைது செய்யப்பட்ட பொலிஸ்காரரிடம் பொலிஸார் தீவிரமாக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## மோர்பி தொங்கு பால விபத்துப் பகுதியை பார்வையிட குஜராத் செல்கின்றார் மோடி



குஜராத்தின் மோர்பி நகரில் வரலாற்று சிறப்புமிக்க – பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கேபிள் பாலம் சில தினங்களுக்கு முன்பு ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் இருந்தபோது, திடீரென இடிந்து விழுந்துள்ளது. இந்த சம்பவத்தில் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என 150 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தும், பலர் மீட்கப்பட்டும் உள்ளனர். சிலர் சிகிச்சையில் உள்ளமையுடன், தொடர்ந்து மீட்பு, நிவாரண பணிகள் நடந்து வருகின்றன.

இந்த சம்பவத்தையடுத்து, குஜராத் மாநிலம் மோர்பி நகரில் கேபிள் பாலம்ப்அறுந்து விழுந்து விபத்துக்குள்ளான நிகழ்விடத்தை பிரதமர் நரேந்திர மோடிவ்இன்று பார்வையிட உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இந்தத் தகவலை குஜராத் முதலமைச்சர் பூபேந்திர பட்டேல் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## ரூ. 70 கோடி பெறுமதியான ஹெரோயின் டெல்லி விமான நிலையத்தில் பிடிபட்டது



புதுடெல்லி, நவ.01

டெல்லியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் பெலிஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து இந்தியப் பணத்தில் சுமார் 70 கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவரின் உடைமைகள் அதிகாரிகள் முழுமையாகச் சோதனை செய்ததில், அவரிடம் ஹெரோயின் போதைப்பொருள் இருந்ததை அவர்கள் கண்டுபிடித்தனர். பறிமுதல் செய்யப்பட்டுள்ள போதைப்பொருள் மொத்தம் 9.95 கிலோ நிறை கொண்டதாக இருந்துள்ளது. இது சர்வதேச சந்தையில் ரூ.69.95 கோடி மதிப்புள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். இதனைக் கொண்டு வந்த பயணி கைது செய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள்கைப் பற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## டி.வி.டி. பிளேயரில் தங்கக் கடத்தல் விமான நிலையத்தில் பறிமுதலானது



சென்னை, நவ.91

துபாயில் இருந்து சென்னைக்கு டி.வி.டி. பிளேயரில் மறைத்து கடத்தி வரப்பட்ட ரூ.17 லட்சத்து 15 ஆயிரம் மதிப்புள்ள 385 கிராம் தங்கத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் பெரும் அளவில் கடத்தல் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன என விமான நிலைய சுங்க இலாகா முதன்மை கமினர் மேத்யூ ஜோல்லிக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, அவரது உத்தரவில் சுங்க இலாகா அதிகாரிகள் விமான பயணிகளைத் தீவிரமாகக் கண்காணித்தனர். அப்போது துபாயில் இருந்து வந்த விமானத்தில் பயணம் செய்த சென்னையை சேர்ந்த வாலிபரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரித்தனர். அதிகாரிகளிடம் அவர் முன்னுக்கு பின் முரணாக பேசியமையால் அவரது உடைமைகளைச் சோதனை செய்தனர்.

இதன்போது, அதில் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் இருந்தன. அவரிடம் இருந்து ரூ.3 லட்சத்து 15 ஆயிரம் மதிப்புள்ள எலக்ட்ரானிக்ஸ் பொருள்களைக் கைப்பற்றினார்.

அதில் இருந்த டி.வி.டி. பிளேயரை சந்தேகத்தின் பேரில் பிரித்து பார்த்த போது அதற்குள் தங்க தகடு. மறைத்து வைக்கப்பட்டு இருந்ததைக் கண்டுபிடித்தனர்.

இந்நிலையில், அவரிடம் இருந்து ரூ.17 லட்சத்து 15 ஆயிரம் மதிப்புள்ள 385 கிராம் தங்கத்தை பறிமுதல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## நெல்லை விவசாயிகள் போராட்டம்



திருநெல்வேலி, நவ.1

திசையன்விளை அருகே புதிய கல்குவாரி அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து நெல்லை கலெக்டர் அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு போராட்டத்தில்ஈடுபட்டமை அங்கே பதற்றத்தை உருவாக்கியது.

நெல்லை மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது. கலெக்டர் விஷ்ணு தலைமை தாங்கி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி அவர்களது குறை நிறைகளை கேட்டறிந்தார்.

இந்நிலையில், திசையன்விளை அருகே உள்ள காரியாண்டி கிராம விவசாயிகள் கலெக்டர் அலுவலகத்திற்கு திரண்டு வந்து முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டமையால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அவர்கள் கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர். அந்த மனுவில், காரியாண்டி கிராமத்தில் இருந்து சாத்தான்குளம் செல்லும் சாலையில் புதிதாக கல்குவாரி அமைக்கப்படுவதாக தகவல் உள்ளது. அங்கு புதிதாக கல்குவாரி அமைத்தால் எங்கள் கிராமத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே கல்குவாரி அமைக்க அனுமதி அளிக்கக் கூடாது என்று கோரியுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நூலகங்களைத் திறந்து பயனில்லை அவற்றைப் பயன்படுத்தவும் வேண்டும்

## குச்சவெளித் தவிசாளர் முபாறக் வலியுறுத்து







(அபு அலா)

தேசிய வாசிப்பு வாரத்தையொட்டி குச்சவெளி வடலிக்குளம் பிரதேசத்தில் புதிய நூலகத்தை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறத்து வைத்து பொதுமக்களிடம் கையளித்து வைத்தார்.

குச்சவெளி பிரதேச சபை செயலாளர் மா.மாலினி அசோக்குமார் தலைமையில் நேற்று இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவில், உதவித் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தவிசாளர் ஏ.முபாறக் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

நூலகங்களை பெயரளவில் திறந்து வைப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை. அதனை முழுமையாக நாம் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். எம்மிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். அது ஒரு மனிதனை பரிபூரணமாக்குகிறது.

மின்னணு ஊடகத்தின் ஆதிக்கம் இன்று அதிகரித்துள்ளதால் அச்சு ஊடகத்தின் பயன்பாட்டை அது குறைவடையச் செய்துள்ளது.

அதனால் எம்மிடையே புதிய நூல்களை வாங்கும் பழக்கமும், நூலகங்களில் நூல்களை எடுத்து வாசிக்கும் பழக்கமும் குறைந்து வருகின்றது.

வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதற்கு பெற்றோர்களும் ஒரு காரணமாக உள்ளனர். ஏனென்றால், வீட்டில் புத்தகங்களை படிக்கும் பழக்கம் அவர்களிடத்தில் இல்லாததால், பிள்ளைகளும் அப்படியே மாறிவிடுகின்றனர். இதிலிருந்து நாம் மீண்டுகொள்வதன் மூலம் வாசிப்புப் பழக்கத்தை எம்மிடத்தில் ஏற்படுத்திக்கொள்ள முடியும்- என்றார்.

இந்நிகழ்வின்போது, நூலக வளாகத்தில் பயன்தரும் மரக்கன்றுகளும் தவிசாளர் உள்ளிட்ட அதிதிகளினால் நட்டிவைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# வியாழேந்திரன் உட்பட நான்கு பேர் மட்டக்களப்பு நீதிவானால் விடுதலை



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரியின் உடற்பாகங்களை கள்ளியங்காடு இந்துமயானத்தில் புதைத்தமைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2019 ஆம் ஆண்டு இப்போதைய இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட 5 நபர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போலினால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதனால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த 2019 ஏப்ரல் உயிர்த்த ஞாயிறு குண்டுதாக்குதலை மேற்கொண்டவர் எனக் கூறப்படும் காத்தான்குடியைச் சேர்ந்த தற்கொலை குண்டுதாரியான ஆசாத்தின் உடற்பாகம் கள்ளியன்காடு இந்து மயானத்தில் பொலிஸாரால் புதைக்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்து 2019 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 திகதி வியாழேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டு கல்லடி பாலத்தை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்காரர்களைப் மீது பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகள் வீசி அடித்து வெளியேற்றினர். இந்த சம்பவம் தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இணைப்புச்செயலாளர்யோ.றொஸ்மன், இளைஞர்ஒருங்கிணைப்பாளர் அனோஜன் மாநகர சபை உறுப்பினர்களான செல்வி மனோகரன் மற்றும் அருள்தாஸ் சுசிகலா ஆகியோருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் மட்டு தலைமையக பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 3 ஆண்டுகளாக வழக்கு விசாரணை இடம்பெற்றுவந்தது

இந்த வழக்கு விசாரணைக்காக நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிவான் பீற்றர் போல் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது எதிராளியான மாநகர சபை உறுப்பினர்களான செல்வி மனோகரன் உயிரிழந்துள்ளமை பதியப்பட்டது. வழக்கு விசாரணைக்குப் பொலிஸார் தொடர்ந்து சமுகமளிக்காதமையை அடுத்து வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டு, முடிவுறுத்தப்பட்டுள்ளதாக நீதவான் தீர்ப்பளித்தார்.

# விவசாயக் காணிகளை ஆர்வமுள்ளோருக்கு தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுங்கள்!

## அம்பாறை மாவட்ட வலையமைப்பு வற்புறுத்தல்





(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக பாரம்பரிய விவசாய மற்றும் வெற்றுக்காணிகளை விவசாய செய்கைகளுக்காக அதில் ஆர்வமுள்ளவர்களுக்கு வழங்கும் திட்டத்துக்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இதனை காலதாமதம் ஏற்படுத்தாது உடன் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான அம்பாறை மாவட்ட வலையமைப்பின் இணைப்பாளர் எம்.ஐ.றியாழ் தலைமையில் காரைதீவு பல்நோக்கு கூட்டுறவு சங்க கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அக்காணிகளை விவசாய செய்கையில் ஆர்வமுள்ளமக்களுக்கு வழங்குவதற்கான சட்ட ரீதியான அறிவுறுத்தல்களையும் அரச வர்த்தமானி மற்றும் சுற்றிக்கையையும் உடன் அரசு வெளியிடவேண்டும். இதன் மூலம் நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிக்க வாயப்புள்ளது.

1930 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட அபரிமிதமான உணவுப் பற்றாக்குறையை இல்லாமல் செய்வதற்கு அரச அறிவுறுத்தலின் படி நடைமுறைப்படுத்தப்பட்ட பசுமைப்புரட்சி காரணமாக அதிக மக்கள் விவசாய செய்கையில் ஈடுபட்டார்கள். அதனால் இலங்கை அரிசி ஏற்றுமதி செய்யும் அளவிற்கு அப்போது முன்னேறியதையும் அரசு நினைவில் கொண்டு செயற்பட வேண்டும் எனக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கண்டி சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் செயற்படும் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான அம்பாறை மாவட்ட வலையமைப்பு இவ்விடயத்தை வலியுறுத்தியுள்ளது. இவ்வலையமைப்பில் அம்பாறை மாவட்டத்திலுள்ள சிவில் அமைப்புகள் மற்றும் கிராம மட்ட ஒத்துழைப்பு மன்றங்களின் முக்கியஸ்தர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடமாடும் சேவையைக் குழப்பியதாக கஜேந்திரன் எம்.பி.மீது குற்றச்சாட்டு!



தமக்கான சேவையைக் குழப்பும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தலைமையிலான குழு செயற்பட்டதாக சேவை பெற வந்தவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஒழுங்கமைப்பில் நேற்று (திங்கட்கிழமை) நடமாடும் சேவை நடைபெற்ற நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட செயலகத்தின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உள்ளிட்டவர்களுடன் மாவட்ட செய லக கேட்போர் கூடத்தினுள்ளும் நுழைந்து கோஷங்களை எழுப்பினர்.

இதனால் நடமாடும் சேவைக்கு சில மணி நேரம் இடையூறு ஏற்பட்ட நிலையில் பொலிஸார் போராட்ட காரர்களை மாநாட்டு மண்டபத்தில் இருந்து வெளியேற்றினர்.

அதன் பின்னர் நடமாடும் சேவை இடையூறு இன்றி தொடர்ந்தது. இந்நிலையில் சேவை பெற வந்திருந்தவர் ஒருவர் தெரிவிக்கையில், எமக்கான ஆவணங்களை பெறுவதற்கு நாம் கொழும்பு செல்வதாயின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சுமார் 15 ஆயிரம் ரூபா வரையில் செலவாகும்.

இந்த நிலைமையில், இந்த நடமாடும் சேவை ஊடாக இலகுவாக ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என இங்கே வந்திருந்த போது, நாடாளுமன்ற உறுப்பினரின் தலைமையில் சிலர் இங்கு வந்து போராட்டம் செய்தனர்.

நீதி அமைச்சருக்கு எதிராக நாடாளுமன்றில் குரல் கொடுக்க வேண்டிய நாடாளுமன்ற உறுப்பினர், மக்கள் சேவை நடைபெறும் இடத்தில் வந்து அதனைக் குழப்பும் முகமாக செயற்பட்டமை எமக்கான சேவைகளைத் தடுக்கும் நோக்கமாகவே நாம் கருதுகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும். இதில் எமக்கு எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. எமது உறவினர்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளனர்.

அதற்காக அமைச்சர் இல்லாத இடத்தில் – மக்கள் சேவை இடம்பெறும் இடத்தினுள் – அத்து மீறி நுழைந்து அதனைக் குழப்பும் செயற்பாடாக நாடாளுமன்ற உறுப்பினர் நடந்து கொண்டமை கண்டனத்துக்கு உரியதாகும் எனத் தெரிவித்தார்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் வசித்த நிலையில் மீள நாடு திரும்பியுள்ளோருக்கு, அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கடவுச்சீட்டு போன்றவற்றை பெறுவதற்கு இலகுவாக இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சர்வதேச கடல்சார் மற்றும் தளவாடங்கள் மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு சர்வதேச கடல்சார் மற்றும் தளவாடங்கள் மாநாடு இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகின்றது.

இந்த மாநாடு கொழும்பில் இன்று ஆரம்பமாகவுள்ளதுடன், நாளையும் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கடல்சார் மற்றும் தளவாடத் துறையின் பல்வேறு பங்குதாரர்கள் கூட்டாண்மைகளை உருவாக்கவும் இந்திய துணைக் கண்டம் மற்றும் அதற்கு அப்பால் உள்ள எதிர்காலத் திட்டங்களைப் பற்றிய அதிக புரிதலை உருவாக்குவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

முதலீட்டு வாய்ப்புகள், தகவல், தரவு மற்றும் பிராந்தியத்தின் திட்ட மேம்பாடு பற்றியும் விவாதிக்கப்படவுள்ளது.

## இந்தியாவில் பாலம் இடிந்து விழுந்து விபத்து: வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இரங்கல்!



குஜராத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை பாலம் இடிந்து விழுந்ததில் குறைந்தது 91 பேர் உயிரிழந்த நிலையில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அனைவருக்கும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன், மற்றவர்களை மீட்கும் பணிகள் வெற்றியடையும் என்று நம்புகிறேன்' எனக் கூறியுள்ளார்.

நடைபாதை பாலம் இடிந்து விழுந்ததில் 100 பேர் காணாமல் போயுள்ள அதேவேளை மச்சு ஆற்றில் நூற்றுக்கணக்கான மக்கள் மூழ்கினர்.

பகுதியளவு நீரில் மூழ்கிய தொங்கு பாலத்தில் இருந்து தப்பியவர்கள் தொங்கிக்கொண்டிருப்பதை சமூக வலைதள வீடியோக்களில் காணமுடிகின்றது.

உள்ளூரில் ஜூல்டோ குளம் என்று அழைக்கப்படும் மேற்படி பகுதி பிரபலமான சுற்றுலாத்தலம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விதைக் குண்டுகளை வீசியது விமானப்படை!



2030 ஆம் ஆண்டில் பசுமை விரிவாக்கத்தை 27 வீதம் முதல் 32 வீதம் ஆக உயர்த்துவதன் மூலம் நாட்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக இலங்கையின் வன அடர்த்தியை மேம்படுத்தும் நோக்கில் இலங்கையின் வன அடர்த்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்று விமானப் படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டம் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் வழிகாட்டல் மற்றும் தலைமையின் கீழ் நடத்தப்பட்டு, சியாம்பலா பிரதேச செயலகத்துக் குட்பட்ட வத்தேகம கபிலித்த வனப் பிரதேசத்தில் கடந்த 29 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவுபெற்றது.

வீரவெல இலங்கை விமானப்படை தளத்தை மையமாகக் கொண்டு இல.4 ஹெலிகொப்டர் படைப்பிரிவுக்கு உரித்தான பெல் 212 ரக ஹெலிகொப்டர் மூலம் 20 தடவைகள் இந்த விதைகுண்டுவீச்சு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 80 ஏக்கர் பரப்பளவு கொண்ட வனப்பகுதியில் கூலன், வேம்பு, ஆத்தி, நாகை, புளி, பருத்தி, பாலை, வீரை, மருது, கித்துள் உட்பட ஒரு லட்சம் விதைகள் தயாரிக்கப்பட்டு வான்வழியாகத் தெளிக்கப்பட்டன.

இந்த வேலைத்திட்டம் இலங்கை வன பாதுகாப்பு திணைக்களம், பேராதனை பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் அமைந்துள்ள கட்டளை வேளாண்மைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

15ஆம் திகதி புத்தளம் பகுதியில் இராஜாங்க அமைச்சர் சனத் நிராந்த பயணித்த வாகனம், சைக்கிள் ஒன்று மீது மோதியதில் அதில் பயணித்த நபர் படுகாயமடைந்தார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த 45 வயதான குறித்த நபர், புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகக் குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சுமார் 15 நாட்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் சாரதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் இன்று காலை மருத்துவமனையில் இருந்து குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

## மண்மேடு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் காயமடைந்த வீட்டின் உரிமையாளரும் உறவுக்கார பெண் ஒருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், 73 வயதான வீட்டின்உரிமையாளர்உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## சாணக்கியனை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார். இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டுபிடிக்கப்பட்டு பதவிகள் பறிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு, மண்முனை தென் மேற்கு, பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வறிய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் விளையாட்டுக்கழகங்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்து பேசிய இராஜாங்க அமைச்சர்,

பிரச்சினைகளைவைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருப்பது இலகுவான விடயம். நான் 2015 தொடக்கம் 2019 வரை எதிர்க்கட்சி அரசியல் செய்தவன்.

மட்டக்களப்பில் அதிகளவில் ஆர்ப்பாட்டங்களைச் செய்தவர்கள் நாங்கள்தான். கிட்டத்தட்ட 42 ஆர்ப்பாட்டங்கள். அனேகமானோர் எம்மைக் கேலி செய்திருக்கின்றார்கள்.

காந்தி பூங்காவை உங்களது பெயர் எழுதி வைத்திருக்கின்றீர்களா எனக் கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய ஒருவர் எம்மிடம் கேட்டார். இன்று அவரும் அதே இடத்தில்தான் குந்திக் கொண்டிருக்கின்றார்.

மட்டக்களப்புமாவட்டத்தில்கிட்டத்தட்ட 4 இலட்சம் வாக்காளர்களில் எமக்கு வாக்களித்தவர்கள் 34 ஆயிரம் பேர். ஆனால், முழுப் பிரச்சினைகளையும் நாங்கள்தான் முடித்துக் கொடுக்க வேண்டும். பிரச்சினையைக் கூறுவது மாத்திரம் அல்ல பிரச்சினைக்கான தீர்வுகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகத்தான் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுடன் நாங்கள் பல தடவைகள் பேச்சுகளை மேற்கொண்டோம். இதன் அடிப்படையிலேயே ஒரே தடவையில் 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். தீபாவளி தினத்தன்றும் 3 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நாங்கள் வெறுமனே அபிவிருத்தி சார்ந்த அரசியலை மாத்திரம் செய்யவில்லை. உரிமையோடு கூடிய அபிவிருத்தி சார்ந்த அரசியல் மாத்திரம்தான் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கும் என்ற யதார்த்தமான அரசியலைக் கையில் எடுத்துள்ளோம் – என்றார்.

## ஆலயத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினமும் ஆலய வழிபாட்டுக்காக செல்லும் இவர், வழமை போல கால் கழுவச் சென்றபோது சறுக்கி வீழ்ந்து தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட வேளையில் அவர் உயிரிழந்துள்ளார்.

## ஆப்கானிஸ்தானை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய ஆப்கானிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆப்கானிஸ்தான் அணியின் ரஹ்மானுல்லாஹ் குர்பாஸ் 28 ஓட்டங்களையும், உஸ்மான் காஹ்னி 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுகளையும், லஹிரு குமார 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்தநிலையில், பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை அணி 18.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 9 பந்துகள் மீதமிருக்க வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணியின் தனஞ்சய டி சில்வா 42 பந்துகளில் 66 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

பந்து வீச்சில் ஆப்கானிஸ்தான் அணியின் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ராஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## அதிகாரப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத்திரமான அதிகாரப்பகிர்வினூடாகவும் வலுவான புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியுடன் இலங்கையை முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பத்தை தென்னிலங்கை அரசியல் சமூகம் நழுவ விடாமல் பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச் சந்திரன்.

அண்மையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, 'தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு தயாராக உள்ளது. தமிழ்த் தலைமைகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்' என்று கூறியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் சுரேஷ்விடுத்துள்ளஊடகஅறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நல்லதோர் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இவ்விடயம் தொடர்பாக உள்நாட்டிலும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடனும் பேசவிருப்பதாகவும் இதனைத் தமிழர் தரப்பு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தமிழ் மக்களுக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றார். இதனைப் போலவே, புதுடில்லியில் இருக்கக்கூடிய இலங்கைத் தூதுவரான மிலிந்த மொரகொடவும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய அணுகுமுறை, புதிய பேச்சுகள் தேவை எனக் கூறியுள்ளார்.

இவர்கள் இருவருமே பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து வருபவர்கள். மாகாண சபை முறைமை என்பது வெள்ளையானை என்றும், அது இலங்கைக்குத் தேவையற்ற ஒன்று என்றும் இவர்கள் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டு வருகின்றார்கள்.

இவர்களது புதிய அணுகுமுறை, புதிய பேச்சு என்பது பதின்மூன்றாவதையும் இல்லாமல் செய்வதற்கான முயற்சியா? அல்லது அதற்கு மேல்சென்று தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒருவழிமுறையா? என்ற கேள்வி எழுகின்றது.

நல்லாட்சி அரசு ஆட்சியில் இருந்தபோது புதிய அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, அதில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்றோம் என்ற பெயரில் சில விடயங்களும் உள்ளடக்கப்பட்டன. அன்றைய அரசில் இதற்கான வழிநடத்தல் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. இந்தக் குழு 83 முறை கூடியும் எத்தகைய முடிவையும் எட்டாமல் வெறும் காலம்கடத்தும் செயற்பாடாக அமைந்தது மட்டுமன்றி, அந்த முயற்சி குப்பைக்கூடைக்குள் போடப்பட்டது.

இப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கக்கூடிய பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் அதிலிருந்து வெளியேறியிருக்கும் விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதம மந்திரி பதவி வகிக்கின்ற தினேஷ் குணவர்த்தன போன்றவர்களும், தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமைகளும் கிடைத்துவிடக் கூடாது என்பதில் ஒருமித்த கருத்தைக் கொண்டவர்கள்.தாங்கள் சிங்கள மக்களின் வாக்குகளினாலேயே வென்றதாகவும், எனவே தாங்கள் சிங்கள மக்களின் பிரதிநிதிகள் என்றும் ஓங்கிக் குரல் கொடுத்து வரு பவர்கள்.

ரணில் விக்கிரமசிங்கவோ பொதுஜன பெரமுனவின் ஆதரவில் ஜனாபதி பதவியை வகிக்கின்றவர். தனது ஆட்சிக்காலத்திலேயே ஒரு புதிய அரசியல்சாசனத்தைக்கொண்டுவர முடியாத ஒருவர் நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டவாறு இனவாதிகளைக் கொண்டிருக்கும் இந்த அரசில் புதிய அரசியல் சாசனத்தை இவரால் கொண்டுவரமுடியுமா? அதற்கு இந்த இனவாத சக்திகள் இடம்கொடுக்குமா? எம்மைப் பொறுத்தவரையில், தமிழ் மக்களை இன்னுமொருமுறைஏமாற்றுவதற்கான முயற்சிகளின் ஆரம்பகட்டமே இந்த நாடகம்.

இத்தகைய நாடகங்களை ஏற்கனவே பலமுறை தமிழ் மக்கள் கண்டிருக்கின்றார்கள். உண்மையாகவே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இந்த நாடு பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்கு முக்கியமான ஒருவிடயமாகும். உலக நாடுகள் பலவும் இலங்கை அரசுக்கு அவ்விதமான ஆலோசனைகளை வழங்கியிருப்பதாகவே நாங்கள் அறிகின்றோம். ஆகவே நீங்கள் கூறிக்கொள்வதுபோல இந்த நாட்டின் உண்மையான தேசபக்தர்களாக இருந்தால், இந்த நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து ஓரளவேனும் காப்பாற்ற விரும்பினால், இந்த நாட்டின் பிரஜைகளான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் உண்மையான நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என நீங்கள் கருதினால், பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உங்களது தீர்வுகள் அமைய வேண்டும்.

நீங்கள், பேச்சுக்குத் தயார் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று கூறுவதை விடுத்து, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை முன்வைப்பதனூடாக மாத்திரம்தான் பேச்சுகளை ஆரம்பிக்க முடியும்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ். ஜே.வி செல்வநாயகம் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தே தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார். அதனை நீங்கள் ஏற்காமல் எம்மை ஆயுத முனையில் அடக்க நினைத்ததன் விளைவாக தமிழ்ச் சமூகம் தனி நாட்டுக்காகப் போராடியது.

2009இல் அந்தப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னரும் தமிழ்த் தேசிய இனத்தின் மீதான உங்களது அடக்குமுறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இப்போது அனைத்து தமிழ்த் தலைமைகளும் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு கோரி நிற்கின்றனர். எனவே தமிழ்த் தரப்பு தனக்கு என்ன தேவை என்பதை தெளிவாக முன்வைத்துள்ளனர். இது குறித்து உங்களது நிலைப்பாடு என்ன என்பதை வெளிப்படுத்துவதே இப்பொழுதைய தேவை.

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு நல்லதோர் சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது. எனவே, தோல்வியுற்ற இனவாத சிந்தனைக்குள் தொடர்ந்தும் மூழ்கியிருக்காமல், தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதனூடாகவும், காத்திரமான அதிகாரப்பகிர்வினூடாகவும் வலுவான புலம்பெயர்தமிழ்மக்களின்உதவியுடன் இலங்கையை முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பத்தை தென்னிலங்கை அரசியல் சமூகம் நழுவ விடாமல் பற்றிப்பிடித்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இந்தியாவும் இலங்கையும் நாணயத்தின் இருபக்கங்கள் என்னும் ஜனாதிபதி ரணில் விக்கிரமங்கவின் அண்மைக் கால கருத்து உண்மையாக இருக்குமானால், முதற்கட்டமாக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவான மாகாண சபை முறைமையை முழுமையாக நடைமுறைப்படுத்த முன்வருவதுடன், இலங்கை மண்ணை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் சக்திகளுக்கு வழங்காமல் இருப்பதும் அவசியம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்றுள்ளது.

